Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 215 | உள்ளூர் - 03.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 215 | வெளியூர் - 04.08.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


திரிகிரஹ யோகத்தால் 5 ராசிகளுக்கு அதிர்ஷ்டம்...!

மத்திய அரசு வங்கி: 11403 காலியிடங்கள்!

விஜய் அமைச்சரவையில் அதிரடி மாற்றம்? 4 அவுட்? 3 மாற்றம்?

திருப்பரங்குன்றம் தீப வழக்கு நிராகரிப்பு!

## டெல்லி செங்கோட்டையில் சுதந்திர தின விழா ஏற்பாடுகள் தீவிரம்!

புதுடெல்லி, ஆக. 03–



நாட்டின் 79–வது சுதந்திர தினம் வருகிற 15–ந்தேதி (சனிக்கிழமை) நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி பிரதமர் மோடி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களிடம் உரையாற்ற உள்ளார்.

தொடர்ந்து 13–வது ஆண்டாக அவர் செங்கோட்டையில் தேசியக் கொடியேற்றுவது குறிப்பிடத்தக்கது. விழாவுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக, கடந்த மாதம் 15–ந் தேதி முதல் செங்கோட்டை பகுதி டெல்லி போலீஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. வருகிற 15–ந் தேதி வரை பொதுமக்கள் செங்கோட்டையை பார்வை யிட தடை விதிக்கப்பட்டு உள்ளது. பாதுகாப்பு காரணங்களால் செங்கோட்டை மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளில் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. செங்கோட்டையில் பிரதமர் கொடியேற்றும் பகுதியில் பார்வையாளர்கள் அமர்வதற்கான இருக்கைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டு, 24 மணி நேரமும் போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வருகிற 16–ந் தேதி வரை டெல்லி வான்பரப்பில் டிரோன்கள், ஆளில்லா சிறிய விமானங்கள், பாராகிளைடர்கள், பாராமோட்டார்கள், ஹேங் கிளைடர்கள் ஆகியவற்றை இயக்க தடை விதித்து டெல்லி போலீசார் உத்தரவிட்டுள்ளனர். செங்கோட்டை பகுதியில் காற்றாடி பட்டம் பறக்கவிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ரெயில் நிலையங்களில் வெளியூர் செல்லும் பயணிகள், ரெயிலில் வரும் பயணிகள் ஆகியோரின் உடைமைகள் சோதனையிடப்பட்ட பின்பே அனுமதிக்கப்படுகின்றனர்.

வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களை கண்டறிய மோப்ப நாய் பிரிவு களத்தில் இறக்கப்பட்டு உள்ளன. செங்கோட்டைக்கு செல்லும் சாலைகள் அனைத்தும் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டு உள்ளன. இவ்வாறு தலைநகர் முழுவதையும் கையில் எடுத்துள்ள பாதுகாப்பு படையினர் அங்கு மர்ம நபர்களின் நடமாட்டம், ஆயுதங்கள், வெடிபொருட்களின் இருப்பு குறித்து சல்லடை போட்டு தேடி வருகின்றனர்.

## வைகை ஆற்றில் குப்பை அகற்ற களமிறங்கிய அண்ணாமலை!

மதுரை, ஆக. 03–




மதுரை வைகை ஆற்றில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றும் பணியில் வீ தி லீடர்ஸ் அமைப்பின் தலைவர் அண்ணாமலை ஈடுபட்டார். தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை, அக்கட்சியில் இருந்து விலகி, 'வீ தி லீடர்ஸ்' அமைப்பை தொடங்கி, பல்வேறு சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கடந்த மாதம் நடத்தினார். இந்த மாதம் முழுவதும் தமிழகம் முழுவதும், ஏரி, கால்வாய் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல் போன்ற பணிகள் நடைபெற உள்ளன.

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையில் 'வீதி லீடர்ஸ்' அமைப்பின் சார்பில் சுத்தப்படுத்தும் பணி நடைபெற்றது. அதில், அண்ணாமலை பங்கேறார். அவர் கடற்கரையில் அமைப்பினருடன் இணைந்து தூய்மை பணி மேற்கொண்டார். அவர் கடற்கரை தூய்மை இயக்கத்தை துவக்கி வைத்தார். அந்த வகையில் மதுரை வைகை ஆற்றில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றும் பணியில் வீ தி லீடர்ஸ் அமைப்பின் தலைவர் அண்ணாமலை ஈடுபட்டார். கடற்கரையில் கூடிய அவரது ஆதரவாளர்கள் அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.

## தமிழகத்தில் கனிம விற்பனை: புதிய விதி!

சென்னை, ஆக. 03–



தமிழகத்தில் அனுமதிக்கப்பட்ட கனிமத்துடன் அதிக மதிப்புள்ள வேறு கனிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டால், அதற்கான கூடுதல் கட்டணத்தை செலுத்தி அவற்றையும் விற்பனை செய்ய அனுமதி அளிக்கும் வகையில் இந்த திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசின் இயற்கை வளங்கள் துறை வெளியிட்டுள்ள அரசிதழ் அறிவிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்கு முறை) சட்டம், 1957–ன் கீழ் தமிழக சிறு கனிம சலுகை விதிகள், 1959–ல் தமிழக அரசு திருத்தம் செய்துள்ளது. அதன்படி, கட்டிடம் மற்றும் சாலை அமைக்கும் பொருட்களுக்கான கற்கள் தொடர்பான பட்டியலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை இடம் பெற்றிருந்த 'கிரானைட் அல்லாத கற்கள்' என்ற வகைப்பாட்டுக்கு பதிலாக, இயற்கையாக சிதைந்த கருங்கல், கல் துண்டுகள், பெரிய பாறைக்கற்கள், உடைக்கப்பட்ட மற்றும் நொறுக்கப்பட்ட கற்கள், மெட்டல் ஜல்லி, சாலை அமைப்பதற்கான கற்கள் உள்ளிட்டவை சேர்க்கப்பட்டுள்ளன.

சுரங்க குத்தகைதாரர் ஒருவர் தனது அனுமதிக்கப்பட்ட சுரங்க பகுதியில் கிடைக்கும் இயற்கையாக சிதைந்த கருங்கல்லை விற்பனை செய்ய விரும்பினால், அதுகுறித்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அந்த கல்லில் என்னென்ன கனிமங்கள் உள்ளன என்பதை கண்டறிய புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குனரகத்தின் ஆய்வகத்தில் மாதிரி பரிசோதனை செய்யப்பட வேண்டும். அந்த ஆய்வில் அதிக மதிப்புள்ள கனிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டால், சட்டம் மற்றும் விதிகளின்படி அந்த கனிமங்களை விற்பனை செய்ய வேண்டும்.

அதேபோன்று, அதிக கட்டணம் நிர்ணயிக்கப்பட்ட வேறு கனிமங்கள் அந்தக் கல்லில் இருப்பது கண்டறியப்பட்டால், அவற்றுக்கான கூடுதல் கட்டணத்தை செலுத்திய பின்னர், இயற்கையாக சிதைந்த கருங்கல்லாகவே அதனை விற்பனை செய்யவும் அனுமதி வழங்கப்படும். இதற்கான திருத்தத்தை தமிழக அரசு கடந்த ஜூலை 23–ந் தேதி அமல்படுத்தி அரசிதழில் வெளியிட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மின்வாரியத்தில் பதவி உயர்வு மழை!

சென்னை, ஆக. 03–




முதல்வர் விஜய் தலைமையிலான அரசு அமைந்தவுடன் மின்வாரியத்தில் ஒரே சமயத்தில் 300 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. இந்த நிலையில், 2வது கட்டமாக உதவி பொறியாளர்களுக்கு தற்போது பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012ம் ஆண்டு உதவி பொறியாளர்களாக பணியில் சேர்ந்தவர்களுக்கு உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, 700 பேர் பதவி உயர்வை பெற்றுள்ளனர்.

பதவி உயர்வு பெற்றவர்களுக்கு காலியாக இருக்கும் உதவி செயற்பொறியாளர் பணியிடங்களை ஒதுக்கப்படுகிறது. மேலும், பதவி உயர்வு பெற்றவர்கள் விரும்பும் இடங்களில் பணிகளை ஒதுக்கவும் முன்னுரிமை அளிக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட்டி விகிதத்தில்

# இனி குழப்பம் இல்லை! அக்.1 முதல் அமல்

## ஆர்பிஐ புதிய விதி!!

புதுடெல்லி, ஆக. 03–




இந்திய ரிசர்வ் வங்கி (RBI), பிக்சட் டெபாசிட் (FD) தொடர்பான புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது. இந்த விதிகள் 2026 அக்டோபர் 1 முதல் அமலுக்கு வருகின்றன.

புதிய விதிப்படி, ஒரே வங்கியின் வெவ்வேறு கிளைகளில் ஒரே தொகை மற்றும் ஒரே காலத்திற்கு செய்யப்படும் பிக்சட் டெபாசிட்களுக்கு இனி ஒரே வட்டி விகிதம் மட்டுமே வழங்க வேண்டும்.


மேலும், வங்கிகள் தங்களின் வட்டி விகிதங்களை முதலில் தங்கள் இணையதளத்தில் வெளியிட்டு, அதன்பிறகே வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்க வேண்டும். மொத்த (Bulk) டெபாசிட் வட்டி விகிதங்களும் ஒவ்வொரு வேலை நாளும் காலை 10 மணிக்குள் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

இந்த விதி வணிக வங்கிகள், சிறு நிதி வங்கிகள், கிராமப்புற வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட அனைத்து வங்கிகளுக்கும் பொருந்தும்.

**முக்கியம்:** ஏற்கனவே செய்யப்பட்ட FD–களின் வட்டி அல்லது முதிர்வு தொகையில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், இனி புதிய FD செய்வதற்கு முன் பல்வேறு வங்கிகளின் வட்டி விகிதங்களை ஒப்பிட்டு சிறந்த முதலீட்டு முடிவை எடுக்க இந்த விதிமுறை உதவும்.

## தமிழகம் நோக்கி பொங்கி வரும் காவிரி!

சென்னை, ஆக. 03–



கடந்த ஜூன் மாதம் 28–ந் தேதி நடைபெற்ற காவிரி ஒழுங்காற்றுக்குழு கூட்டத்தில் தமிழக அரசு காவிரியில் கர்நாடகம் அரசு தண்ணீர் திறந்துவிட தனது வாதங்களை அழுத்தமாக முன்வைத்தது. இதனைத் தொடர்ந்து, 15 நாட்களுக்கு காவிரியில் வினாடிக்கு 3,500 கனஅடி வீதம், அதாவது 4½ டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டிற்கு திறந்துவிட கர்நாடகத்தை காவிரி ஒழுங்காற்றுக்குழு அறிவுறுத்தியது. ஆனால், அதற்கும் கர்நாடகம் மறுத்துவிட்டது.

### காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு

அதுமட்டுமல்லாமல், காவிரி மேலாண்மை ஆணையத்தில் இதுகுறித்து முறையிடுவோம் என்றுகூறி, கர்நாடக அரசு முறையிட்டது. இந்த முறையீட்டின் அடிப்படையில் காவிரி மேலாண்மை ஆணையம் கடந்த மாதம் (ஜூலை) 24–ந் தேதி மீண்டும் கூடியது. அப்போது கர்நாடகத்தின் வாதத்தை நிராகரித்த ஆணையம், சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி நடந்துகொள்ள கர்நாடக அரசை வலியுறுத்தியதுடன், காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரைத்த அளவில் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடவும் கர்நாடகத்துக்கு உத்தரவிட்டது.

### இருமாநில முதல்–மந்திரிகள் சந்திப்புக்கு எதிர்ப்பு

இந்த உத்தரவுக்கு கர்நாடக அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் குதித்தன. இதற்கிடையே, தமிழக முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் – கர்நாடக முதல்–மந்திரி டி.கே.சிவகுமார் ஆகியோர் இன்று பெங்களூருவில் சந்தித்து பேச ஏற்பாடு செய்யப்பட்டது. இதுகுறித்து, இரு மாநில முதல்–மந்திரிகளும், தங்கள் மாநில நீர்வளத்துறை அதிகாரிகளுடன் அவசர ஆலோசனையில் ஈடுபட்டனர். இதற்கு மத்தியில், தமிழக எதிர்க்கட்சிகள் இருமாநில முதல்–மந்திரிகள் சந்திப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தன.

### அரசியல் சூட்டை தணித்த மழை

கர்நாடகத்திலும் எதிர்ப்பு வலுத்ததால், கர்நாடக மாநில முதல்–மந்திரி டி.கே.சிவகுமார், தமிழக முதல்–அமைச்சர் இப்போது வரவேண்டாம் என்று கூறிவிட்டார். இப்படி, இருமாநில அரசியலில் அனல் பறந்து கொண்டிருந்த நேரத்தில், அரசியல் சூட்டை தணிக்கும் வகையில் கடந்த மாதம் (ஜூ லை) 31–ந் தேதி, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால், கர்நாடக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது.

இதனால், பாதுகாப்பு கருதி கபினி அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தற்போதைய நிலையில், தமிழகத்திற்கு 28 ஆயிரம் கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. பொங்கி வந்த காவிரி இப்போது எல்லையை கடந்து தமிழக மண்ணை முத்தமிட்டு இருக்கிறது. இதனால்,டெல்டா மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### நீர்வரத்து அதிகரிக்கும்

தற்போதைய நிலையில், கர்நாடக அணைகளான கிருஷ்ணராஜசாகரில் 91.8 அடியும் (மொத்த கொள்ளளவு 124.8 அடி), கபினியில் 56.28 அடியும் (65 அடி), ஹேரங்கியில் 127.55 அடியும் (129 அடி), ஹேமாவதியில் 100.98 அடியும் (117 அடி) தண்ணீர் உள்ளது.

கர்நாடக அணைகள் வேகமாக நிரம்புவதால், தமிழகத்திற்கான தண்ணீர் திறப்பு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில், மேட்டூர் அணையில் 73.82 அடி கொள்ளளவு தண்ணீர் உள்ளது. காவிரியில் திறந்துவிடப்பட்ட நீர் மேட்டூர் அணையை அடையும்போது, தண்ணீர் அளவு வேகமாக உயரும். டெல்டா பாசன பகுதியில், குறுவை சாகுபடி தப்பினாலும் அடுத்து வரும் சம்பா சாகுபடிக்காவது மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட முடியும்.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 03.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 18-ம் தேதி

## AI மட்டும் போதாது...!




ஏஐ (AI) தெரிந்திருப்பது மட்டும் இனி போதாது. வாடிக்கையாளர்களின் பிரச்சனைகளை புரிந்து, AI–ஐ பயன்படுத்தி தீர்வு வழங்கும் Agentic AI Engineer மற்றும் Forward Deployed Engineer பணிகளுக்கான தேவை இந்தியாவில் வேகமாக அதிகரித்து வருகிறது.

CIEL HR நிறுவனம் 200 நிறுவனங்களில் நடத்திய ஆய்வின்படி, வாடிக்கையாளர் சார்ந்த AI திறன்களைக் கொண்ட பொறியாளர்களை நிறுவனங்கள் அதிகளவில் தேர்வு செய்யத் தொடங்கியுள்ளன. RPG Group, Volvo, EY, Savills India உள்ளிட்ட நிறுவனங்களும் இதை உறுதிப்படுத்தியுள்ளன.

கடந்த ஒரு ஆண்டில் Agentic AI Engineer பணிகளுக்கான தேவை 260%, Forward Deployed Engineerபணிகளுக்கான தேவை 130% உயர்ந்துள்ளது.

இந்தப் பணிகளுக்கு ஆண்டுக்கு ரூ.50 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை சம்பளம் வழங்க நிறுவனங்கள் தயாராக உள்ளன. அதாவது அனுபவம் மற்றும் திறனைப் பொறுத்து மாதம் ரூ.34 லட்சம் அல்லது அதற்கும் அதிகமாக சம்பாதிக்கும் வாய்ப்பு இருப்பதாக துறை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

AI–யை வெறுமனே அறிந்திருப்பதை விட, அதை நிறுவன வளர்ச்சிக்கும் வாடிக்கையாளர் தேவைகளுக்கும் பயன்படுத்தும் திறன் கொண்டவர்களுக்கே எதிர்காலத்தில் அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

## அரசு பாலிடெக்னிக்கில் நேரடி சேர்க்கை ஆக. 31 வரை நீட்டிப்பு!

சென்னை, ஆக. 03–

தமிழக அரசு, அரசு நிதியுதவி மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளில் 202627 கல்வியாண்டுக்கான முதலாம் ஆண்டு, லேட்ரல் என்ட்ரி மற்றும் பகுதி நேர டிப்ளமோ படிப்புகளுக்கான நேரடி (Spot Admission) மாணவர் சேர்க்கையை ஆகஸ்ட் 31 வரை நீட்டித்துள்ளது.

நேரடி சேர்க்கைக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க தேவையில்லை. மாணவர்கள் தேவையான கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிற ஆவணங்களுடன் தாங்கள் சேர விரும்பும் அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு நேரில் சென்று உடனடியாக சேரலாம் என தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

## மதுரை - கான்பூர் பயணிகளுக்கு குட் நியூஸ்...!

மதுரை, ஆக,. 03–

பயணிகள் நெரிசலை சமாளிக்கும் வகையில் மதுரை – கான்பூர் சென்டிரல் இடையே சேலம் வழியாக சிறப்பு ரெயில்இயக்கப்பட உள்ளது. தெற்கு ரெயில்வே வெளியிட்ட அறிவிப்பின்படி, கான்பூர் சென்டிரலில் இருந்து ஆகஸ்ட் 5, 12, 19, 26 ஆகிய தேதிகளிலும், மதுரையில் இருந்து ஆகஸ்ட் 8, 15, 22, 29 ஆகிய தேதிகளிலும் இந்த சிறப்பு ரெயில் இயக்கப்படும்.

இந்த ரெயில் திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி உள்ளிட்ட முக்கிய நிலையங்களில் நின்று செல்லும். பயணிகள் முன்பதிவு செய்து இந்த சிறப்பு சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

## காமன்வெல்த் நிறைவு... 2030 நடத்தும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்ட கொடி!




சென்னை, ஆக. 03–

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்ற 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் கோலாகலமாக நிறைவடைந்தன. நிறைவு விழாவில் 2030 காமன்வெல்த் விளையாட்டை நடத்தும் இந்தியாவிடம் காமன்வெல்த் கொடியும் பாரம்பரிய பேட்டனும் அதிகாரப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது. 2030–ம் ஆண்டு நூற்றாண்டு காமன்வெல்த் போட்டிகள் அகமதாபாத்தில் நடைபெற உள்ளதால், இந்தியாவின் கவுண்ட்டவுன் அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளது.

## விஜய் அமைச்சரவையில் அதிரடி மாற்றம்? 4 அவுட்? 3 மாற்றம்?




சென்னை, ஆக. 03–

முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழ்நாடு அமைச்சரவையில் விரைவில் முக்கிய மாற்றங்கள் நடைபெறலாம் என தகவல் வெளியாகியுள்ளது. உளவுத்துறை அறிக்கைகள், அமைச்சர்களின் செயல்திறன் மற்றும் சர்ச்சைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மாற்றம் பரிசீலிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

வெளியாகியுள்ள தகவல்க ளின்படி, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் உட்பட 4 அமைச்சர்கள் நீக்கப்படலாம். தவெகவைச் சேர்ந்த விஜய் தமிழன் பார்த்திபன், ஜெகதீஸ்வரி, சரத்குமார் மற்றும் காங்கிரஸ் அமைச்சர் விஸ்வநாதன் ஆகியோரின் பதவி பறிக்கப்படலாம் என கூறப்படுகிறது. மேலும், தவெக அமைச்சர்கள் கீர்த்தனா, கமலி மற்றும் காங்கி ரஸ் அமைச்சர் ராஜேஸ்குமார் ஆகியோருக்கு இலாகா மாற்றம் செய்யப்படலாம் என்றும் தகவல் வெளியா கியுள்ளது. ஆகஸ்ட் 5–ம் தேதி தொடங்கும் பட்ஜெட் கூட்டத்தொடர் முடிந்த பின் அமைச்சரவை மாற்றம் நடைபெறலாம் என்றும், புதிதாக 3 பேருக்கு அமைச்சர வையில் வாய்ப்பு வழங்கப்படலாம் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தவெக-வில் ஓபிஎஸ் மகன்?!"அப்பாவோட வாங்க"; பனையூர் பதில்?




சென்னை, ஆக. 03–

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தின் மகன், முன்னாள் எம்.பி. ஓ.பி. ரவீந்திரநாத், தவெக–வில் இணைய விருப்பம் தெரிவித்து பனையூரில் உள்ள கட்சித் தலைமையிடம் தூது அனுப்பியதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், ஓ.பன்னீர்செல்வத்துடன் இணைந்து வந்தால்தான் அரசியல் செல்வாக்கு இருக்கும் என தவெக தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து, ஓ.பன்னீர்செல்வம் தவெக–வில் இணைகிறாரா? என்ற பேச்சு அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

தகவல்களின்படி, திமுக–வில் இணைய ஓ. பன்னீர்செல்வம் எடுத்த முடிவுக்கு ரவீந்திரநாத் உடன்படவில்லை என்றும், அவர் தொடர்ந்து தவெக–வில் இணையவே விரும்பியதாக கூறப்படுகிறது. ஆனால், ஏற்கனவே தவெக–வில் இணைந்த முன்னாள் அதிமுக நிர்வாகிகளின் நிலை மற்றும் அரசியல் சூழல் காரணமாக, மகனின் விருப்ப த்திற்கு ஓ.பன்னீர்செல்வம் தயக்கம் காட்டி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில், மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை கருத்தில் கொண்டு ரவீந்திரநாத் தவெக–வை நோக்கி நகர்வதாகவும், அதே நேரத்தில் ஆளுங்கட்சி யாக உள்ள தவெக, பிற கட்சிகளில் இருந்து வரும் தலைவர்களுக்கு முக்கிய பொறுப்புகள் வழங்குவதில் எச்சரிக்கையுடன் இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பீகார் இடைத்தேர்தல்- பிரசாந்த் கிஷோர் முன்னிலை!



பீகார், ஆக. 03–

பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள வங்கிபூர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று காலை தொடங்கியது. முதல் சுற்று வாக்கு எண்ணிக்கை நிறைவடைந்த நிலையில், ஜன் சுராஜ் கட்சியின் தலைவர் பிரசாந்த் கிஷோர், பா.ஜ.க. வேட்பாளர் நீரஜ் குமார் சின்ஹாவை விட 862 வாக்குகள் முன்னிலையில் உள்ளார். தேர்தல் வியூக நிபுணராக அறியப்படும் பிரசாந்த் கிஷோரின் முதல் நேரடி தேர்தல் களமாக இருப்பதால் நாடு முழுவதும் கவனம் பெற்றுள்ளது. இந்தத் தொகுதி நீண்டகாலமாக பா.ஜ.க.வின் கோட்டையாக கருதப்படு வதால், வாக்கு எண்ணிக்கையின் ஒவ்வொரு சுற்றும் அரசியல் வட்டார ங்களில் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது. வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவதால், அடுத்தடுத்த சுற்றுகளில் முன்னிலை மாறக்கூடும் என்றாலும் முதல் சுற்றில் முன்னிலை எடுத்து இருப்பதால் இந்த தேர்தல் முடிவு கவனம் பெறத்தொடங்கியுள்ளது. பீகாரில் கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் பிரசாந்த் கிஷோர் கட்சி 243 தொகுதிகளில் போட்டியிட்டு அனைத்திலும் தோல்வி கண்டது. வெறும் 3.3 சதவீத வாக்குகளே அக்கட்சி பெற்றது.

## புர்ஜ் கலிஃபா: இந்தியர்களுக்கு துபாயின் புதிய சலுகை!



துபாய், ஆக. 03–

துபாய் செல்லும் இந்தியர்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில், உலகின் உயரமான கட்டிடமான புர்ஜ் கலிஃபாடிக்கெட்டுகளை இனி யு.பி.ஐ (UPI) மூலம் நேரடியாக ஆன்லைனில் முன்பதிவு செய்து கட்டணம் செலுத்தும் வசதி அறிமுகமாகியுள்ளது. இதன் மூலம், வளைகுடா நாடுகளில் ஆன்லைன் யு.பி.ஐ கட்டணத்தை ஏற்கும் முதல் சுற்றுலாத் தலமாக புர்ஜ் கலிஃபா மாறியுள்ளது.

இந்த வசதியை NPCI International, NEOPAY, Emaar Entertainment ஆகியவை இணைந்து அறிமுகப்படுத்தியுள்ளன. இதனால் இந்தியர்கள் இந்தியாவில் இருந்தபடியே டிக்கெட்டுகளை எளிதாக முன்பதிவு செய்ய முடியும்.

டிக்கெட் கட்டணம்

சில்வர் (124, 125): 149 திர்ஹம் (சுமார் ₹3,884)

கோல்ட் (148): 399 திர்ஹம் (சுமார் ₹10,401)

பிளாட்டினம் (152154): 769 திர்ஹம் (சுமார் ₹20,045)

இந்தியர்கள் புர்ஜ் கலிஃபாவுக்கு அதிக அளவில் வருகை தருவதால், இந்த புதிய யு.பி.ஐ வசதி அவர்களுக்கு பயணத்தை மேலும் எளிதாக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நீண்ட காலம் மின் கட்டணம் செலுத்தாவிட்டால்... தானாக துண்டிக்கப்படும் மின் இணைப்பு!




சென்னை, ஆக. 03–

நீண்ட காலமாக மின் கட்டணம் செலுத்தாத நுகர்வோரின் மின் இணைப்புகளை தானியங்கி முறையில் துண்டிக்கும் நடைமுறையை தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் (TNPDCL) அமல்படுத்தி யுள்ளது.

புதிய நடைமுறையின்படி, 6 மாதங்களுக்கு மேல் கட்டணம் செலுத்தாதவர்களுக்கு காகித அறிவிப்புக்கு பதிலாக குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிப்பு அனுப்பப்படும். மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட 90 நாட்களுக்குப் பிறகு எஸ்எம்எஸ் அனுப்பப்படும், அதன்பின் 90 நாட்களுக்குள் நிலுவைத் தொகை செலுத்தப்படாவிட்டால் அல்லது இணைப்பு புதுப்பிக்கப்படாவிட்டால், அந்த மின் கணக்கு நிரந்தரமாக ரத்து செய்யப்படும்.

தற்போது வீட்டு மின் நுகர்வோருக்கு கட்டணம் செலுத்த 20 நாட்கள் அவகாசம் வழங்கப்படுகிறது. காலக்கெடுவுக்குள் செலுத்தாவிட்டால் மின் இணைப்பு துண்டிக்கப்படும். இந்த புதிய நடைமுறை ஊழியர் பற்றாக்குறையை சமாளிக்கவும், பணிகளை விரைவுபடுத்தவும் கொண்டு வரப்பட்டதாக மின்வாரியம் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில், நுகர்வோர் அமைப்புகளும் முன்னாள் அதிகாரிகளும் இந்த நடைமுறை குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.



## திரிகிரஹ யோகத்தால் 5 ராசிகளுக்கு அதிர்ஷ்டம்...!




ஆகஸ்ட் 3 முதல் 9, 2026 வரை கடக ராசியில் குரு, சூரியன், புதன் இணைவதால் திரிகிரஹ யோகம் உருவாகிறது. இந்த யோகத்தால் கன்னி, தனுசு, மகரம், கும்பம், மீனம் உள்ளிட்ட 5 ராசிக்காரர்களுக்கு குடும்பம், தொழில், நிதி, பயணம் உள்ளிட்ட துறைகளில் சாதகமான மாற்றங்கள் ஏற்படும் என ஜோதிடத்தில் கூறப்படுகிறது.

**கன்னி**

தொழில், நிதி, கல்வியில் முன்னேற்றம். குடும்பத்தில் திருமணம் அல்லது குழந்தை பிறப்பு போன்ற சுப நிகழ்வுகள் நடைபெற வாய்ப்பு. மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

பரிகாரம்: புதன்கிழமை பச்சைக் காய்கறிகள் தானம் செய்து, செவ்வாய்க்கிழமை ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.

**தனுசு**

பணியிடத்தில் முன்னேற்றம், நல்ல செய்திகள், பயண வெற்றி, உடல்நல மேம்பாடு. குடும்பத்துடன் மகிழ்ச்சியான நேரம் அமையும்.

பரிகாரம்: தினமும் சூரிய பகவானை வழிபட்டு சூரிய நமஸ்காரம் செய்யவும்.

**மகரம்**

தொழில், குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி மற்றும் செழிப்பு அதிகரிக்கும். பயணங்களில் வெற்றி, உடல்நலக் கவலை குறையும்.

பரிகாரம்: தினமும் விநாயகரை வழிபட்டு லட்டு நிவேதனம் செய்யுங்கள்.

**கும்பம்**

துணையுடன் உறவு வலுப்படும். குடும்ப ஆலோசனையுடன் முடிவெடுத்தால் நன்மை. செலவுகள் அதிகரித்தாலும் வருமானம் சமாளிக்க உதவும்.

பரிகாரம்: காலை நேரத்தில் ஆதித்ய ஹிருதயம் அல்லது சூர்ய சாலிசா பாராயணம் செய்யவும்.

**மீனம்**

திரிகிரஹ யோகம் மற்றும் புதாதித்ய யோகத்தால் நிதி வாய்ப்புகள், பயண யோகம், பணியிட ஆதரவு கிடைக்கும். முக்கிய முடிவுகளை அவசரப்படாமல் எடுப்பது நல்லது.

பரிகாரம்: ஏழை, எளியவர்களுக்கு தானம் செய்து உதவுங்கள்.

## நீட் பி.ஜி. 2026 தேர்வில் அதிரடி மாற்றங்கள்..!




புதுடெல்லி, ஆக. 03–

நீட் பி.ஜி. (NEET PG 2026) தேர்வை எழுதும் மருத்துவ பட்டதாரிகளுக்காக மத்திய சுகாதார அமைச்சகம் பல முக்கிய மாற்றங்களை அறிவித்துள்ளது. ஆகஸ்ட் 30–ம் தேதி நடைபெறும் தேர்வு இந்த ஆண்டு நாடு முழுவதும் 340 நகரங்களில், 1,300–க்கும் மேற்பட்ட மையங்களில் ஒரே ஷிப்டில் நடத்தப்படுகிறது.

**முக்கிய மாற்றங்கள்**

தேர்வர்கள் 3 விருப்ப நகரங்கள் மற்றும் மாநிலங்களை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யலாம்.

தேர்வு நகர விவரங்கள் தேர்வுக்கு 3 வாரங்களுக்கு முன் ‘Intimation Slip’ மூலம் வெளியிடப்படும்.

தேர்வு நேரம் 3 மணி 30 நிமிடங்கள் மாற்றமின்றி தொடரும்.

கேள்விகள் 200–லிருந்து 180–ஆகக் குறைக்கப்பட்டுள்ளதால், ஒவ்வொரு கேள்விக்கும் கூடுதல் நேரம் கிடைக்கும்.

விண்ணப்பம் மற்றும் தேர்வு நாளில் ஆதார் அடிப்படையிலான அடையாள உறுதிப்படுத்தல் கட்டாயம். கைரேகை சரிபார்ப்பு முடியாவிட்டால் கருவிழி (Iris) பயோமெட்ரிக் மூலம் உறுதிப்படுத்தப்படும்.


PIB தகவலின்படி, நீட் பி.ஜி. 2026 தேர்வுக்கு 2,73,183 பேர் விண்ணப்பித்துள்ளனர். இது கடந்த ஆண்டைவிட 12.5%க்கும் அதிகமான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.



குற்றால அருவிகளில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு 2–வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரதான அருவி, மெயின் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் தடை விதிக்கப்பட்டுள்ளது.




# சிறுநீரை அடக்கி வைக்கும் பழக்கம் இருக்கா..?




அன்றாட அவசரமான வாழ்க்கை சூழலில் பலர் தங்களது உடல் ஆரோக்கியத்தை கண்டுகொள்வதே இல்லை. குறிப்பாக, வேலைப் பளு காரணமாகச் சிறுநீரை நீண்ட நேரம் அடக்கி வைக்கும் பழக்கம் பலரிடமும் காணப்படுகிறது. ஆனால், இந்த அலட்சியப் போக்கு கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என வனபத்தி அரசு மருத்துவமனையின் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜ்குமார் எச்சரித்துள்ளார்.

பொதுவாக, கழிவுகள் நிரம்பும்போது சிறுநீர்ப்பை விரிவடைந்து, சிறுநீர் கழித்தவுடன் மீண்டும் தனது இயல்பு நிலைக்குத் திரும்பும் தன்மையைக் கொண்டது. ஆனால், சிறுநீரைத் தொடர்ந்து அடக்கி வைக்கும்போது சிறுநீர்ப்பை மீண்டும் சுருங்கும் நெகிழ்ச்சித்தன்மையை நிரந்தரமாக இழந்துவிடும். இதன் முற்றிய நிலையில், நோயாளிகள் தாமாகச் சிறுநீர் கழிக்க முடியாமல் 'கதீட்டர்' (Catheter) எனப்படும் குழாய் பொருத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், சிறுநீரை நீண்ட நேரம் தேக்கி வைப்பது 'சிறுநீர் பாதை தொற்று' (UTI) ஏற்படும் அபாயத்தை வெகுவாக அதிகரிக்கும். சிறுநீர் பாதையில் இயல்பாகவே இருக்கும் பாக்டீரியாக்கள், சிறுநீர் கழிப்பதன் மூலம் வெளியேற்றப்படும். ஆனால், சிறுநீர் தேங்கும் போது பாக்டீரியாக்கள் அங்குப் பெருமளவில் பெருகி, கடுமையான தொற்று மற்றும் தாங்க முடியாத வழியை உண்டாக்குவதுடன், திரும்ப திரும்ப தாக்கும் அபாயத்தையும் ஏற்படுத்தும். ஏனெனில், சிறுநீரை வெளியேற உதவும் கட்டுப்படுத்த இடுப்புப் பகுதித் தசைகள் அதிகளவில் இறுக்கமடைவதே இந்த வலிக்கு காரணம் ஆகும்.

மிக அரிதாக, சிறுநீர்ப்பை வெடித்து சிதையும் ஆபத்தும் உள்ளது. சிறுநீர்ப்பை உடைந்தால், வெளியேற வேண்டிய கழிவுநீர் வயிற்றுப் பகுதிக்குள் பரவிவிடும். இந்த ஆபத்தான சூழலை சரிசெய்ய உடனடி அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும் என்றும் மருத்துவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, சிறுநீரகங்கள் மற்றும் சிறுநீர் பாதை சீராக இயங்கப் போதுமான அளவு தண்ணீர் குடிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியமான ஒன்று சிறுநீர் கழிக்கும் உணர்வு வந்தவுடன் அதை உடனே வெளியேற்றுவதுதான். அதில் ஏதேனும் அசௌகரியம் அல்லது வலி ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி ஆலோசனையும் சிகிச்சையும் பெற வேண்டும் என்றும் டாக்டர் ராஜ்குமார் வலியுறுத்தியுள்ளார்.

# ஈரான்-அமெரிக்கா இடையே பேச்சுவார்த்தை: டிரம்ப்!



வாஷிங்டன் டி.சி., ஆக. 03– ஈரான்–அமெரிக்கா இடையே பேச்சுவார்த்தை நடைபெறும் என்று டிரம்ப் நம்பிக்கை தெரிவித்து உள்ளார்.

ஏர் போர்ஸ் ஒன் விமானத்தில் ஏறி செல்வதற்கு முன்பு, செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஈரானுக்கு எதிரான போர் நிறுத்தத்திற்கு அந்த 3 நாடுகளே காரணம். ஈரானும், அவர்களும் எங்களிடம் கேட்டு கொண்டனர். அதனால், தாக்குதல் ரத்து செய்யப்பட்டு உள்ளது. மக்களின் உயிரிழப்பை பார்க்க நான் விரும்பவில்லை. ஏனெனில், நிறைய மக்கள் உயிரிழந்து விட்டனர். அதனை நாங்கள் விரும்பவில்லை என்று கூறினார்.

நாங்கள் அவர்களிடம் பேசி கொண்டிருக்கிறோம் என ஈரானியர்களை குறிப்பிட்டு கூறினார். இதன்படி நண்பகல் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அவர் கூறினார். கடந்த வெள்ளிக்கிழமை பெரிய தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது. சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் கேட்டு கொண்டதற்கு ஏற்ப அதனை நிறுத்த முடிவு செய்தோம் என கூறினார்.

ஈரானுடன் விரைவில் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படும். ஒட்டுமொத்த அளவில் ஹார்மூஸ் ஜலசந்தி திறக்கப்படுவதுடன், ஈரானின் அணு ஆயுத அச்சுறுத்தலும் முடிவுக்கு வரும் என்று டிரம்ப் கூறியுள்ளார்.

# விளாத்திகுளம் திமுக எம்.எல்.ஏ மார்க்கண்டேயனுக்கு நிபந்தனை ஜாமீன்!



தூத்துக்குடி, ஆக. 03– தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் கடந்த 18–ந் தேதி தி.மு.க. பொதுக்கூட்டம் நடந்தது. இதில் பங்கேற்ற விளாத்திகுளம் தொகுதி திமுக எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் தமிழக முதல்–அமைச்சர் விஜய்க்கு மிரட்டல் விடுக்கும் வகையிலும், அவதூறாகவும் பேசினார். இது தொடர்பாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், திமுக எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனை போலீசார் கடந்த 20ம் தேதி கைது செய்தனர். பின்னர், கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட மார்க்கண்டேயனை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் அடைக்க கோர்ட்டு உத்தவிட்டது. இதையடுத்து அவர் நெல்லை பாளை யங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார்.

இதையடுத்து, தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் தாக்கல் செய்த மனுவை தூத்துக்குடி கோர்ட்டு கடந்த 22ம் தேதி தள்ளுபடி செய்தது. இதனை தொடர்ந்து தனக்கு ஜாமீன் வழங்கக்கோரி தூத்துக்குடி கோர்ட்டில் 2வது முறையாக மார்க்கண்டேயன் மீண்டும் மனு தாக்கல் செய்தார். அந்த ஜாமீன் மனுவும் தள்ளுபடி செய்தது. இதையடுத்து, திமுக எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்து இருந்தார்.

இந்த மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட், மார்க்கண்டேயனுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது. இனிமேல் இதுபோன்று பேசமாட்டேன் என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும். தூத்துக்குடி காவல் நிலையத்தில் நாள்தோறும் ஆஜராகி கையெழுத்திட வேண்டும். சட்டமன்றம் நடைபெறும் நாளில் மட்டும் கையெழுத்திடுவதில் விலக்கு அளிக்கப்படுகிறது" என்று கூறியிருந்தார்.

மார்க்கண்டேயன் பேசியது என்ன? மானங்கெட்ட தமிழ்நாட்டினுடைய முதல் அமைச்சர்.. உன்னைய சட்டமன்றத்திற்குள் வைத்து பார்த்துகுறோம்.. நாங்க என்ன கோமாளி பயல்கள்னு நினைக்கிறீங்களா.. சட்ட மன்றத்தை பூட்டுவாராம்.. பூட்டினால் எவுறப்பு இருக்காது உடைத்துவிட்டுதான் உன்னை அனுப்பி விடுவோம். இவ்வளவு ஒரு கேவலமான ஒரு முதல்வரை தமிழ்நாடு மட்டுமின்றி இந்திய வரலாறே பெற்றது இல்லை. என மார்க்கண்டேயன் பேசியிருந்தார்.

# திருப்பரங்குன்றம் தீப வழக்கு நிராகரிப்பு!



மதுரை, ஆக. 03– திருப்பரங்குன்றம் தீப வழக்கில் தமிழக அரசின் மேல்முறையீடு மனு விசாரணைக்கு வந்தது. தீர்ப்பு இந்தாண்டு ஜனவரி மாதம் வந்துள்ளது. இவ்வளவு நாட்களாக என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். தமிழக அரசு தரப்பில், ஆவணங்களை மொழிபெயர்ப்பு செய்வதற்கு தாமதம் ஆனதாக தெரிவித்தனர். இதை ஏற்காத நீதிபதிகள், எதிர் மனுதாரர்களை பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டனர். தீபத்தூணில் தீபம் ஏற்றும்படி ஐகோர்ட் மதுரைக்கிளை பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்கால தடை விதிக்க முடியாது என்று சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது. உத்தரவுக்கு தடை கோரிய தமிழக அரசின் கோரிக்கையை, சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் நிராகரித்தனர்.

மேலும் நீதிபதிகள் கூறியதாவது:

- தீபத்தூணில் தீபம் ஏற்றுவது தொடர்பான மனுக்கள் முழுமையாக விசாரித்த பிறகு தான் எந்த முடிவும் எடுக்கப்படும்.
- தீபத்தூணில் தீபம் ஏற்ற ஜனவரி மாதம் ஐகோர்ட் மதுரைக்கிளை உத்தரவிட்ட நிலையில் 6 மாதம் கழித்து அப்பீல் செய்வது ஏன்?
- தமிழக அரசின் மேல்முறையீடு குறித்து பதில் அளிக்குமாறு மனுதாரர் ராமரவிக்குமார், மதுரை கலெக்டர் பதில் அளிக்க சுப்ரீம்கோர்ட் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் வழக்கு! பிரஜ் பூஷண் விடுதலை!!




புதுடெல்லி, ஆக. 03– பாலியல் துன்புறுத்தல் அளித்ததாக மல்யுத்த வீராங்கனைகள் தொடர்ந்த வழக்கிலிருந்து இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் (டபிள்யுஎஃப்ஐ) முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷண் சரண் சிங்கை தில்லி நீதிமன்றம் இன்று விடுவித்தது.

இந்திய முன்னணி மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகத், சாக்ஷி மாலிக் உள்பட 6 பேர், இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் தலைவராக இருந்த பாஜக எம்பி பிரிஜ் பூஷண் சரண் சிங்கிற்கு எதிராக பாலியல் துன்புறுத்தல் அளித்ததாக கடந்த 2023 ஆம் ஆண்டு புகார் அளித்தனர்.

இந்த புகாரைத் தொடர்ந்து, பிரஜ் பூஷண் மற்றும் டபிள்யுஎஃப்ஐ முன்னாள் உதவிச் செயலாளராக இருந்த வினோத் தோமர் ஆகியோருக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 354, 354ஏ, 354டி, 506(1) ஆகிய குற்றச்சாட்டின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. புகார் அளித்தவர்களில் ஒரு வீராங்கனை மைனர் பெண் என்பதால் போக்சோ சட்டத்தின் கீழும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதனிடையே, சிறுமிக்கு அநீதி இழைக்கப்பட்டதாக பொய்யான புகாரை அளித்ததாக விசாரணையின் இடையே அவரது தந்தை திடுக்கிடும் கூற்றை முன்வைத்தார்.

இதையடுத்து, கடந்தாண்டு மே மாதம், மைனர் மல்யுத்த வீராங்கனை அளித்த புகாரை ரத்து செய்யக் கோரி தில்லி காவல்துறை அளித்த பரிந்துரையை ஏற்று, பிரஜ் பூஷணுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் இருந்து போக்சோ பிரிவை நீதிமன்றம் ரத்து செய்தது. இந்த நிலையில், மல்யுத்த வீராங்கனைகளின் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லாததால் பிரஜ் பூஷண் மற்றும் வினோத் தோமர் ஆகியோரை வழக்கிலிருந்து விடுவிப்பதாக தில்லி ரோஸ் அவென்யு நீதிமன்றத்தின் கூடுதல் தலைமை நீதிபதி அஸ்வினி பன்வார் இன்று உத்தரவிட்டார்.



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தும்பேரி ஊராட்சியைச் சேர்ந்த விவசாயி பெரியசாமி (த/பெ. தங்கவேலு) அவர்களுக்கு, பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் ரூ.4.30 இலட்சம் மானியத்தில் 1,200 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள பட்டுப்புச்சி வளர்ப்பு கூடத்தையும், 2 ஏக்கர் பரப்பளவில் வளர்க்கப்பட்டு வரும் மல்பெரி தோட்டத்தையும் மாவட்ட ஆட்சியர் குரவிகுமா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, வளர்ப்பு மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து விவசாயிடம் கேட்டறிந்தார்.

# ஆடிப்பெருக்கு நாளில் தங்கம் விலை உயர்வு!



சென்னை, ஆக. 03– தங்கம் விலை கிராமுக்கு ரூ. 30 உயர்ந்து ரூ.13,250–க்கும், சவரனுக்கு ரூ. 240 உயர்ந்து ரூ. 1,06,000–க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை தொடர்ந்து ஐந்தாவது நாளாக மாற்றமின்றி கிராம் ரூ. 235–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2.35 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

# கேரளத்தில் மேக வெடிப்பு ஏற்பட வாய்ப்பு- வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!



திருவனந்தபுரம், ஆக. 03– மத்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அவசர எச்சரிக்கை செய்திக்கு றிப்பில் கூறிப்பிருப்பதாவது:–

கேரளத்தில் கனமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில் மாநிலத்தில் பல இடங்களில் மேக வெடிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பத்தனம்திட்டா, கோட்டயம், ஆலப்புழை, இடுக்கி, எர்ணாகுளம், திருச்சூர், பாலக்காடு. மலப்புரம் கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு ஆகிய 12 மாவட்டங்களுக்கு தீவிர மழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.இந்த மாவட்டங்களில் 24 மணி நேரத்தில் 115 மி.மீ. முதல் 204 மி.மீ. வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் 24 மணி நேரத்தில் 115 மி.மீ. முதல் 204 மி.மீ. வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இந்தநிலையில் கனமழை காரணமாக கண்ணூர், பத்தனம்திட்டா மாவட்டங் களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்றும் (திங்கட்கிழமை) விடுமுறை அறி விக்கப்பட்டுள்ளது.

# கர்நாடக அரசை கண்டித்து விவசாயிகள் போராட்டம்!



திருச்சி, ஆக. 03– தற்போது திடீரென கர்நாடக அரசு காவிரியில் 25 ஆயிரம் கனஅடி தண்ணீரை திறந்து விட்டு உள்ளது. உரிய நேரத்தில் தண்ணீர் திறந்து விடாத கர்நாடக அரசை கண்டித்தும், மேகதாது அணை கட்டும் பணியை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தினர் நேற்று திருச்சி காவிரி ஆற்றின் நடுப்பகுதியில் உள்ள ஒரு மணல் திட்டில் அமர்ந்து போராட்டம் நடத்தினார்கள். இந்த போராட்டத்திற்கு மாநில தலைவர் அய்யாக்கண்ணு தலைமை தாங்கினார். குழித்தோண்டி கழுத்தளவு மணலில் புதைந்தும், தூக்குக்கயிறு மாட்டிக் கொண்டும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சாகும் நிலையில் உள்ள விவசாயிகளை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி கோஷங்களை எழுப்பினார்கள். காவிரி ஆற்றின் நடுவில் நடைபெற்ற இந்த போராட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசு வங்கி: 11403 காலியிடங்கள்!

பணியமர்த்தும் நிறுவனம்: வங்கி பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS Institute of Banking Personnel Selection)
பணியின் வகை: மத்திய அரசு வங்கி வேலை
பணியின் பெயர்: Customer Service Associate (Clerk) CRP CSA–XVI
மொத்த காலியிடங்கள்: 11,403
கல்வித் தகுதி: ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Any Degree). புதிய பட்டதாரிகளும் (Freshers) விண்ணப்பிக்கலாம்.
பணியிடம்: இந்தியா முழுவதும்
பணியின் தன்மை: நிரந்தர பணி
வயது வரம்பு
21.08.2026 தேதியின்படி வயது வரம்பு IBPS அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தேர்வு முறை**

ஆன்லைன் ஆரம்பத் தேர்வு (Preliminary Examination)
முதன்மைத் தேர்வு (Main Examination)
IBPS விதிமுறைகளின்படி அடுத்தகட்ட செயல்முறைகள்
சம்பளம்
சம்பள விவரம் மற்றும் இதர சலுகைகள் தொடர்பான முழு தகவல்கள் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.
விண்ணப்பிக்கும் முறை:ஆன்லைன்
விண்ணப்பக் கட்டணம்
அதிகாரப்பூர்வ அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை ஆன்லைனில் செலுத்த வேண்டும்.
முக்கிய தேதிகள்
விவரம் தேதி
ஆன்லைன் விண்ணப்பம் தொடக்கம் 01.08.2026
விண்ணப்பிக்க கடைசி நாள் 21.08.2026
ஹால் டிக்கெட்
விண்ணப்பித்தவர்களுக்கு தேர்வுக்கு 4 முதல் 7 நாட்களுக்கு முன்பு ஹால் டிக்கெட் மற்றும் தேர்வு அழைப்புக் கடிதம் மின்னஞ்சல் மூலம் வழங்கப்படும்.
அதிகாரப்பூர்வ இணையதளம்
www.ibps.in
குறிப்பு: விண்ணப்பிக்கும் முன், வயது வரம்பு, இடஒதுக்கீடு, தேர்வு மையங்கள், கட்டண விவரங்கள் உள்ளிட்ட அனைத்து நிபந்தனைகளையும் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்த்து விண்ணப்பிக்கவும்.

# சேலம்: தனியார் ஆலையில் தீ விபத்து, வாயுக்கசிவு; 11 பேர் மருத்துவமனையில் அனுமதி!



சேலம், ஆக. 03– சேலத்தில் தனியார் ஆலையில் ஏற்பட்ட தீ விபத்து, வாயுக்கசிவால் பாதிக்கப்பட்ட 11 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சேலம் ஆத்தூரில் தனியார் ஜவ்வரிசி ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இதில் மரவள்ளி கிழங்குகளை அரவை செய்து ஜவ்வரிசி, ஸ்டார்ச் மாவு உள்ளிட்டவை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நிலையில், நேற்று மாலை 6 மணியளவில் ஆலையில் மின் கசிவு ஏற்பட்டது. இதில், சாக்கு பைகள் எரிந்து, தீ விபத்து ஏற்பட்டது.

கிழங்குகளை சுத்தம் செய்வதற்கு, மூட்டைகளில் குளோரின் பவுடர் வைக்கப்பட்டிருந்தது. தீ விபத்து தொடர்ச்சியாக குளோரின் பவுடர் பகுதியில் இருந்து புகை எழுந்தது. இதனால், அதிர்ச்சியான தொழிலாளர்கள், அதனை தணிக்க தண்ணீரை ஊற்றியுள்ளனர்.

, குளோரின் பவுடர், புகையுடன் சேர்ந்து வாயுக்கசிவாக மாறியது. இதுபற்றி தகவல் அறிந்து தீயணைப்பு வீரர்கள் உடனடியாக சென்று, தீ மற்றும் வாயுக்கசிவை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். வாயுக்கசிவு பாதிப்பால், 11 பேருக்கு மூச்சுத்திணறல், சுவாச பாதிப்பு, மயக்கம் போன்றவை ஏற்பட்டன. அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். 2 மணிநேரம் வரை போராடி தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




## அமைதி பேரணியில் தற்கொலை தாக்குதல்; 14 பேர் படுகொலை!




பாகிஸ்தான், ஆக. 03–

ஸ்வாட் அமன் ஜிர்கா என்ற உள்ளூர் பழங்குடியின கவுன்சில் சார்பில் கோஷங்களை எழுப்பியும், வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும் அவர்கள் சென்றனர்.

அப்போது, பேரணியில் திடீரென தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், குழந்தை ஒன்று, பொதுமக்களில் 3 பேர், அதிகாரி ஒருவர் மற்றும் 5 போலீசார் உள்பட 14 பேர் பலியானார்கள். 12–க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்தவொரு குழுவோ அல்லது தனிநபரோ உடனடியாக பொறுப்பேற்கவில்லை. இந்த சம்பவத்திற்கு மாகாண முதல்–மந்திரி முகமது அப்ரிடி, கவர்னர் பைசல் கரீம் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளனர்.

## விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் பெருகும்: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்!



சென்னை, ஆக.03–

விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் பெருகும் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். விவசாய விரோத விஜய் ஆட்சியின் சோம்பேறித் தனத்தால் சோகத்தில் விவசாயிகள் மூழ்கியுள்ளனர். கர்நாடகத்தை கண்டித்து ஒரு வார்த்தை கூட பேசாத முதலமைச்சரை தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது. விவசாயிகளின் முழு பயிர்க்கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

## தவெக அரசைக் கண்டித்து திமுக சார்பில் உதயநிதி ஸ்டாலின் ஆர்ப்பாட்டம்!



தஞ்சை, ஆக. 03–

ஆடி 18, ஆடிப்பெருக்கில் ஆறு முழுவதும் தண்ணீர் வழிந்து ஓடும். ஆனால், இப்போது டெல்டா நீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. "திமுக ஆட்சி இருந்திருந்தல் இந்த நிலைமை ஏற்பட்டிருக்குமா?" நிர்வாகத் திறனற்ற ஒரு டம்மி முதல்வரால் இந்த நிலைமை தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றம்சாட்டி உள்ளார்.

விவசாயிகளை வஞ்சிக்கும் தவெக அரசிற்கு எதிராக தஞ்சையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ர்வாக திறனற்ற முதல்வர் விஜய் காரணமாக காவிரி வறண்டு கிடப்பதாகவும் உதயநிதி ஸ்டாலின் குற்றம்சாட்டி உள்ளார். திமுக ஆட்சியில் குறித்த நேரத்தில் ஜூன் மாதம் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது என்று கூறினார்.

எந்த மக்கள் பிரச்சனைகள் மீதும் கவனம் செலுத்தாமல் திமுக மீது இன்றைக்கு என்ன புதிய வழக்கு போடலாம் என்பதிலேயே தான் முதல்வரின் கவனம் உள்ளது. ஆட்சி அமைத்து 3 மாதங்கள் ஆகியும் பாஜக என்ற சொல்லைக் கூட உச்சரிக்காத தைரியசாலி தான் நமது முதல்வர். ஆட்சியை நடத்த காங்கிரஸ் தயவு தேவை என்பதால், தண்ணீர் திறக்காத கர்நாடகாவை தட்டி கேட்க விஜய் அச்சப்படுவதாக உதயநிதி ஸ்டாலின் சாடினார். விவசாயிகளின் நலனை விட சுயநலம் தான் விஜய்க்கு முக்கியமாக உள்ளது.

காவிரியில் தண்ணீர் திறப்பது பற்றியெல்லாம் தவெக அரசுக்கு கவலையே இல்லை, விவசாயிகளின் நலனும் முக்கியம் இல்லை. விவசாயிகள் கண்ணீர் வடித்து கொண்டிருக்கும் போது, தமிழக அமைச்சர்கள் சினிமா பார்த்து கண்ணீர் விடுகின்றனர். இதையெல்லாம் ரீல்ஸாக போடும் ஒரு அரசை இந்தியாவே இதுவரை கண்டதில்லை. கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் வாயிலேயே வடை சுடும் அரசாக தான் தற்போதைய தமிழக அரசு இருக்கிறது.



சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி, தமிழ்நாடு முதல்–அமைச்சர் விஜய்யின் உத்தரவின்படி, சென்னையின் கிண்டி பகுதியில் திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவ சிலைக்கு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் என். ஆனந்த் ஊ மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி (ம) விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ரா.குமார், சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார், சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அருள் பிரகாசம், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சாலையோர உணவகங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை: ஐகோர்ட்டு!



சென்னை, ஆக. 03–

சென்னை ஐகோர்ட்டில் டி.எஸ்.ஸ்ரீதர் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், "மண்ணடிப் பகுதியில் நடைபாதையை ஆக்கிரமித்து ஏராளமான சாலையோர உணவகங்கள் செயல்படுகின்றன. இந்த உணவகங்களில் சமைப்பதற்காக மழைநீர் வடிகால்களை இடித்து சேதப்படுத்துகின்றனர். சாலையில் வைத்து சமைக்கும்போது, மசாலாப் பொருட்கள் காற்றில் பறந்து சாலையில் செல்வோரின் கண்களில்படுகிறது. இதனால் கண் எரிச்சல் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன. சாலையில் கியாஸ் சிலிண்டர்களை வைத்து சமைக்கின்றனர். இதனாலும் பொதுமக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இதுகுறித்து நடவடிக்கை எடுக்க கோரி எஸ்பிளனேடு போலீஸ் நிலையத்தில் புகார் செய்தேன். இதுவரை நடவடிக்கை இல்லை" என்று கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது போலீஸ் தரப்பில், ஆக்கிரமிப்பு தொடர்பான இந்த புகாரை குற்ற வழக்காகப் பதிவு செய்ய முடியாது என வாதிடப்பட்டது. மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல் ரவீந்திரன், மழைநீர் வடிகால்களை இடித்துச் சேதப்படுத்துவதும், மசாலாப் பொடிகளை வீசி பொதுமக்களின் உடல் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதும் குற்றமாகும் என்று வாதிட்டார். இருதரப்பு வாதத்தை கேட்ட நீதிபதி, "இந்த மனு தொடர்பாக 2 வாரங்களில் உரிய விசாரணை நடத்தி சட்டரீதியான நடவடிக்கையை எஸ்பிளனேடு போலீசார் எடுக்க வேண்டும்" என்று உத்தரவிட்டு, வழக்கை முடித்து வைத்தார்.

## தென் கொரியாவில் வரலாறு காணாத வெப்பம்!



சியோல், ஆக. 03–

தென் கொரியாவில் 122 ஆண்டுகளில் இல்லாத அளவாக புதிய உச்சமாக 42.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

தென் கொரியா முழுவதும் கடந்த சில நாட்களாக தீவிர அனல் காற்று வீசி வருகிறது. இந்த நிலையில், நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கும், 122 ஆண்டுகளில் இல்லாத அளவாக புதிய உச்சமாக 42.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. தென் கொரிய வானிலை ஆய்வு மையத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, நாட்டின் தென்கிழக்கு பகுதியிலுள்ள யாங்சான் நகரில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை ),பிற்பகல் 1:26 மணியளவில் இந்த வரலாறு காணாத வெப்பம் பதிவாகியுள்ளது.

கடந்த 1904–ம் ஆண்டு நவீன வானிலை கண்காணிப்பு தரவுகள் சேகரிக்கத் தொடங்கப்பட்டதில் இருந்து பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலை இதுவாகும். யாங்சான் நகரில் தொடர்ந்து ஐந்தாவது நாளாக வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைத் தாண்டி பதிவாகி வருவது குறிப்பிடத்தக்கது.

## நடிகர் பார்த்திபன் வழக்கு - அரசு பதில்ளிக்க உத்தரவு!




சென்னை, ஆக. 03–

சாதி, மதமற்றோர் சான்றிதழ் வழங்குவதற்கான சட்டம் இயற்றக் கோரி நடிகர் பார்த்திபன் ஐகோர்ட்டில் வழக்கு. பார்த்திபன் தொடர்ந்த வழக்கில், தமிழ்நாடு அரசு 4 வாரங்களுக்குள் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாதி, மதமற்றவர் சான்றிதழ் பெற விரும்புவோருக்கு உடனடியாக சான்றிதழ் வழங்க சட்டம் இயற்ற உத்தரவிட வேண்டும் என பார்த்திபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நடிகை திரிஷாவை அரசியலுக்கு வரவேற்கும் விதமாக ஓட்டப்பட்ட போஸ்டர்கள்!




சென்னை, ஆக. 03–

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையாக இருப்பவர் திரிஷா. 22 ஆண்டுகளுக்கும் மேலாக திரையுலகில் கொடிகட்டி பறந்து வரும் திரிஷா குறித்து சமீபகாலமாக சர்ச்சைகள் அதிகரித்துள்ளன. திரிஷாவின் தனிப்பட்ட வாழ்க்கை மட்டுமின்றி திரையுலக வாழ்க்கை குறித்தும் அவ்வப்போது பரபரப்பு கிளம்பி வருகிறது.

சமீபத்தில் தவெக தலைவரும், முதல்–அமைச்சருமான விஜய்யின் பிறந்தநாளையொட்டி அவருக்கு திரிஷா வாழ்த்து தெரிவித்து இன்ஸ்டாகிராமில் வெளியிட்ட புகைப்படம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் நடிகை திரிஷா அரசியலில் ஈடுபட தயாராகி வருவதாகவும் இணையதளங்களில் தகவல் பரவியது. இதற்கு அவர் தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், மதுரையில் நடிகை திரிஷாவை அரசியலுக்கு வரவேற்கும் விதமாக நகரின் பல்வேறு பகுதிகளிலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் "எந்தவொரு அரசியல் கட்சியும் ஆரம்பிக்கும் முதல் மண் எங்கள் மதுரை... என்றும் மதுரை மீனாட்சி தாய் ஆசிர்வாதத்தால் தமிழக சங்க வரலாற்றில் முதல் முறையாக எங்கள் அக்க திரிஷாவிற்கு தமிழக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதல் சங்கம். மதுரை மாவட்டம் திரிஷா நற்பணி மன்றம்" என்று அதில் எழுதப்பட்டுள்ளது. இந்த போஸ்டர்கள் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

## சினிமா துளிகள்..!

## 'ஏடிஎம்-ல் நகை கிடைக்குமா?' சிவகார்த்திகேயன்!




தங்க நகை விற்பனையில் முன்னணி நிறுவனமான கல்யாண் ஜுவல்லர்ஸ், 'அக்ஷயா தங்க மாளிகை (ATM)' என்ற புதிய பிராண்டை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த புதிய பிராண்டின் முதல் ஷோரூம் சென்னை தி. நகரில் பனகல் பார்க் அருகே 25,000 சதுர அடி பரப்பளவில் திறக்கப்பட உள்ளது. அடுத்த 6 மாதங்களில் மேலும் 4 ATM ஷோரூம்கள் தொடங்கப்படவுள்ளன. இந்த பிராண்டுக்காக நிறுவனம் ரூ.300 கோடி முதலீடு செய்துள்ளது.

புதிய விளம்பரத்தில் நடிகர் சிவகார்த்திகேயன், "இனி ஏடிஎம்–லயே நகை வாங்கலாம்" என்று கூறி ஆச்சரியம் ஏற்படுத்துகிறார். அதற்கு "ஏடிஎம்மில் பணம் தான் வரும்; நகை எப்படி வரும்?" என்ற கேள்விக்கு, "ஆகஸ்ட் 21 வரை காத்திருங்கள்" என்று பதிலளித்து எதிர்பார்ப்பை தூண்டுகிறார். இங்கு ATM என்பது 'அக்ஷயா தங்க மாளிகை' என்ற புதிய பிராண்டின் சுருக்கப் பெயராகும். தமிழ்நாட்டு மக்களின் ரசனைக்கு ஏற்ற நகைகளை வழங்கும் நோக்கில் இந்த பிராண்டு உருவாக்கப்பட்டுள்ளதாக கல்யாண் ஜுவல்லர்ஸ் நிர்வாக இயக்குநர் ரமேஷ் கல்யாணராமன் தெரிவித்துள்ளார்.

## ' ரவி மோகனின் புதிய பதிவு வைரல்... ஆர்த்தி அம்மாவுக்கு மறைமுக பதிலடி?



நடிகர் ரவி மோகன் மற்றும் ஆர்த்தி இடையேயான விவாகரத்து வழக்கு நாளுக்கு நாள் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

ஆர்த்தி தரப்பில் மாதம் ரூ.40 லட்சம் ஜீவனாம்சம் கோரப்பட்ட நிலையில், மாதம் ரூ.3 லட்சம் வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, "நாங்கள் ஆர்த்திக்காக ரூ.40 லட்சம் கேட்கவில்லை. அவர்களின் மகன்களின் கல்விச் செலவு மட்டும் ஆண்டுக்கு ரூ.86 லட்சமாக உள்ளது" என்று ஆர்த்தியின் தாய் சமீபத்தில் பேட்டியளித்திருந்தார்.

இந்த நிலையில், தான் இயக்குநராக அறிமுகமாகும் 'An Ordinary Man' திரைப்படத்தின் சில காட்சிகளையும் இசையையும் தனது குடும்பத்தினருக்கு திரையிட்டு காட்டியதாக ரவி மோகன் தெரிவித்துள்ளார். அதை பார்த்து குடும்பத்தினர் மகிழ்ச்சியடைந்ததாகவும், அந்த மகிழ்ச்சியை நடனமாடி கொண்டாடும் வீடியோவையும் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

அதோடு, ஆர்த்தியின் தாய் அளித்த பேட்டிக்கு மறைமுகமாக பதிலளிக்கும் வகையில், "நான் உயிரோடு இருக்கும் வரை நாங்கள் நான்கு பேரும் ஒரே அறையில் இருக்க மாட்டோம்" என்று ரவி மோகன் பதிவிட்டுள்ளார்.

இந்த பதிவு சமூக வலைதளங்களில் வேகமாக பரவி, ரசிகர்கள் மத்தியில் மீண்டும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சூர்யாவின் 'விஸ்வநாத் & சன்ஸ்' முதல் விமர்சனம்...!



'கருப்பு' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து சூர்யா நடித்துள்ள 'விஸ்வநாத் & சன்ஸ்' திரைப்படம் ஆகஸ்ட் 14–ஆம் தேதி வெளியாகிறது. வெங்கி அட்லூரி இயக்கியுள்ள இப்படத்தில் ராதிகா சரத்குமார், ரவீனா டாண்டன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ள நிலையில், 'பட்டாம்பூச்சி' பாடல் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

படம் வெளியாக இன்னும் 12 நாட்கள் உள்ள நிலையில், வெளிநாட்டு விநியோகஸ்தர் ஒருவர் தனது முதல் விமர்சனத்தில், "இது சூர்யாவின் அடுத்த மக்கள் கொண்டாடும் படம். தியேட்டரை விட்டு அனைவரும் மகிழ்ச்சியுடன் வெளியே வருவார்கள். 2026 சூர்யாவுக்கே சொந்தம்" என்று பாராட்டியுள்ளார். இந்த பதிவு ரசிகர்களின் எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020